**அமெரிக்க – இலங்கை வர்த்தக சபையின் 5 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் தூதுவர் டெப்லிட்ஸ் வெளிப்படுத்திய கருத்துக்கள்**

ஜூலை 22, 2021

இனிய மாலை வணக்கங்கள் நண்பர்களே! அசன்க, நீங்கள் நியமிக்கப்பட்டமைக்கும் மற்றும் ஏனைய சபை உறுப்பினர்களுக்கும் வாழ்த்துக்கள். வருடாந்த பொது நிகழ்வில் மூன்றாவது முறையாக உங்கள் முன் உரையாற்றக் கிடைத்த வாய்ப்பை நான் மதிக்கிறேன். எனக்கு அடுத்த தூதுவர் ஏற்கனவே பெயரிடப்பட்டுள்ளதால் இது எனது கடைசி முறையாக இருக்கலாம் எனக் கூறுவதில் நான் வருத்தப்படுகிறேன், எனினும் நான் வெளிச்செல்லும் அல்லது அவர் வருகைதரும் காலநேரங்கள் இதுவரை எம்மிடமில்லை. ஐக்கிய அமெரிக்காவில் எமக்கு இன்னும் நிறைவு செய்யவேண்டிய நடைமுறை விடயங்கள் உள்ளன, எனவே காலநேரங்கள் தொடர்பான நியதிகளை துல்லியமாகக் குறிப்பிடுவது சற்றே கடினம்.

இலங்கையில் கடந்த மூன்று வருடங்கள் பல நிகழ்வுகளைக் கொண்டவையாக இருந்ததுடன், உண்மையில் இலங்கைக்கு மட்டுமன்றி முழு உலகுக்குமே பல நிகழ்வுகளைக் கொண்டவையாக இருந்தன என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நான் நினைக்கிறேன். அரசியல் குழப்பம், தேர்தல்கள், ஒரு கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் நிச்சயமாக தற்போது பரவிவரும் பெருந்தொற்று போன்ற பல நிகழ்வுகள். இந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அமெரிக்கா உண்மையில் அதன் பங்காண்மையின் தரம், பகிரப்பட்ட மதிப்புகள் மற்றும் மூலோபாய நலன்கள் மற்றும் எமது மக்களுக்கிடையேயான நிலையான நட்பின் அடிப்படையில், நிலைபேறான முற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதற்கும் பயங்கரவாதம் மற்றும் நாடுகடந்த குற்றங்களுக்கு எதிராகவும், சட்டத்தின் ஆட்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் ஜனநாயக ஆளுகையினை ஊக்குவிப்பதற்குமான, இலங்கையின் திறனை அதிகரிக்க, நானும் எனது அணியினரும், இலங்கை-அமெரிக்க வர்த்தக சபை உட்பட பல பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளோம்.

எமது பொருளாதார சாதனைகள் மற்றும் நமக்கு முன்னால் இன்னும் உள்ள வாய்ப்புகள் தொடர்பில் கருத்துரைக்க சில தருணங்களை எடுத்துக்கொள்கிறேன்.

முதன்முதலில், பிரதானமாக எனதும், எனக்கு அடுத்து தூதுவராக வருபவரதும் உயரிய முன்னுரிமையாக இருப்பது, நான் முன்பு குறிப்பிட்ட சில

கருப்பொருள்களை எதிரொலிக்கும் வகையில், அமெரிக்க நிறுவனங்கள் இலங்கையில் தொழிற்படுவதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதாகும். அது பொருட்கள் அல்லது சேவைகளை ஏற்றுமதி செய்வதாயினும், [தெளிவில்லை] அரசாங்க விலைமனுக்களுடன் அல்லது முதலீடுகளை மேற்கொண்டு இங்குள்ள பங்குதாரர்களுடன் இணைந்து கூட்டு முயற்சிகள் செய்வதாயினும், நாம் அதற்கு உதவி செய்யத் தயாராக இருக்கிறோம்.

கடந்த மூன்று வருடங்களில் மின்னுற்பத்தி மற்றும் நீர் முகாமைத்துவம் முதல் புகையிரத இயந்திரங்கள், சுகாதாரப் பராமரிப்பு உற்பத்திகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் வரையிலான துறைகளில் தமது வர்த்தக நலன்களைத் தொடர்வதற்கு உயர் தரமுடைய அமெரிக்க நிறுவனங்களுக்கு தூதரகம் உதவியளித்துள்ளது. கற்ற தொழிலாளர் படை மற்றும் உலகின் பொருளாதார ரீதியில் அதிக இயக்கமுடைய பிரதேசத்தின் மையப்பகுதியில் சாதகமான அமைவிடம் இருந்தும், இலங்கையில், இலங்கை முதலீட்டாளர்களின் ஆர்வத்தின் அளவு அண்மைக்காலத்தில் பாதியாகக் குறைந்துள்ளது, ஆனால் அது அதைவிட அதிகமாக இருக்கலாம் என உங்களுக்குத் தெரியும் என நினைக்கிறேன். அனேகமான சந்தர்ப்பங்களில் இந்த ஆர்வம் உண்மையான வியாபார நடவடிக்கைகளாக மாற்றமடைவதில்லை, அவற்றுள் அதிகமானவை உண்மையில் நடைமுறைக்கு வருவதைக் காண நாம் விரும்புகிறோம்.

2020 ஆம் ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க வெளிநாட்டு நேரடி முதலீடு 13 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும், இது இந்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த அமெரிக்க முதலீட்டை 274 மில்லியன் டொலர்களாக உயர்த்தியது. இந்த எண்ணிக்கை கடந்த ஐந்தாண்டுகளில் ஏமாற்றமளிக்கும் வகையில் நிலையாக இருந்ததுடன், அது உண்மையாகவே, ஏமாற்றமளிக்கும் வகையில் சிறியதாகும். இவ்வெண்ணிக்கையினை அதைவிட அதிகரிக்க இயலும் என நான் நினைக்கிறேன். அரச தீர்மானமெடுப்பதில் காணப்படும் நிலையானதன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை பற்றிய கவலைகளே அதற்கான முதன்மையான காரணமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, உண்மையில் முதலீட்டாளர்களுக்குப் புலப்படுதன்மை அவசியம். எனவே முதலீட்டு சார்பு கொள்கைகள் வரவேற்கப்படுகின்றன, எனினும் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்டவிதிகளை தூக்கி வீசக்கூடாது. அரசியல்வாதிகள், அரச தலைவர்கள் மற்றும் தொழில்துறையினர் இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் எதிர்காலத்திற்கான ஒரு பொதுவான நோக்கினைச் சுற்றி ஒன்றிணைந்து ஒரு நிலையான மூலோபாயத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

மாற்றமடையாத கொள்கை தொடர்பான இந்தக் கவலைகளை நீங்கள் உண்மையில் பகிர்ந்துகொள்கிறீர்கள் என நான் நினைக்கிறேன், எனவே உங்களுக்குத் தெரியாத எதையும் நான் கூறவில்லை, ஆனால் எதிர்காலத்தில்

அதிகமான நிலையான தன்மையினைக் காண நாங்கள் ஒத்துழைக்க தயாராக இருக்கிறோம் என்பதையே நான் கூறுகிறேன்.

அவ்வாறே முன்னேற்றம் சாத்தியமாகும் என எனக்குத் தெரியும். வெஸ்ட் கோஸ்ட் எனர்ஜி நிறுவனத்தின் (West Coast Energy) 40 சதவீத பங்குகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு, அமெரிக்க நிறுவனமான நியூ ஃபோர்ட்ரஸ் எனர்ஜி (New Fortress Energy ) மற்றும் இலங்கை அரசுக்கு இடையேயான சமீபத்திய கட்டமைப்பு ஒப்பந்தத்தால் நான் ஊக்கப்படுத்தப்படுகிறேன். ஒரு புகழ்பெற்ற அமெரிக்க நிறுவனம் இந்நாட்டின் எரிசக்தித் துறையில் முதலீடு செய்வதானது, உலகளாவிய முதலீட்டாளர் சமூகத்திற்கு வலுவான நேர்மறையான சமிக்ஞைகளை அனுப்பும் மற்றும் இலங்கைப் பொருளாதாரத்திற்கு மிகத்தேவையான மூலதனத்தை கொண்டு வரும்.

வணிக உறவுகளை உருவாக்குதல் எனும் முதலாவது முன்னுரிமையின் அடிப்படையில் நிலைபேறான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை வளர்ப்பது எனது இரண்டாவது முன்னுரிமையாகும். எனது அனுபவத்தில், அரசுக்கான இன்னும் அதிகமாக அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறையை இலங்கையினால் எளிதாக்க முடியும் - கொள்கை அபிவிருத்திக் கட்டத்தின் போது அதிகளவான மக்களுக்கு அரச தீர்மானங்களை மேற்கொள்பவர்களுடன் ஈடுபட அதிகாரம் அளிக்கும் ஒரு குறிப்பிட்ட வழி எனும் அர்த்தத்தில் நான் இதைச் சொல்கிறேன்.

நாம் அடிக்கடி மாற்றமடையாத நிலையான கொள்கைகள் பற்றி பேசுகிறோம், எனினும் முன்பே தெரியப்படுத்தப்பட்ட கொள்கைகளே உண்மையில் உதவியாயிருக்கும். கொள்கை உருவாக்கம் என்பது விரிவான கலந்தாலோசனைகள் இன்றி மேற்கொள்ளப்படும் போது தேவைக்கேற்றவாறு மாறக்கூடியது மட்டுமன்றி மனம்போனபோக்கில் தாறுமாறாக மாறக்கூடியதும் கூட. இச்செயற்பாட்டில் பொதுமக்களை உள்ளடக்குதல் அரச கொள்கையின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதுடன் புதுமை, சீர்திருத்தம் மற்றும் புதிய கொள்கை அணுகுமுறைகளை உள்வாங்குதலை உருவாக்குகிறது. மற்றும் நிச்சயமாக பொதுமக்கள் என்பது வணிகத் துறையையும் உள்ளடக்கியது.

பரந்த பொதுமக்கள் உள்ளீட்டை உறுதிப்படுத்துவதற்கான தளத்தினை எளிதாக்குவது மற்றும் முகாமை செய்வது எளிதான காரியமல்லவெனினும் ஜனநாயகத்தில் அது முக்கியமான ஒன்றாகும் என்பதுடன் அது மிகவும் சமமான மற்றும் பரந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை முடிவுகளுக்கு வழிவகுக்கும். வர்த்தகசபையானது ஏனைய சபைகளுடன் இணைந்து கொள்கைகள் தொடர்பில் அரசுக்கு எடுத்துச் சொல்வதை நான் அறிவேன் மற்றும் இந்த பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளில் சில, கொள்கை உருவாக்கும் செயன்முறையில் ஏற்றுக்கொள்ளப்படவும் முன்னோக்கிச் செல்லவும் அதிக வாய்ப்புகள் இருக்கும் என்று நம்புகிறேன்.

அமெரிக்கா இலங்கையின் மிகப்பெரிய தனி நாட்டு ஏற்றுமதிச் சந்தையாக உள்ளது, எனவே இலங்கையின் செழிப்பிற்கு இந்த விடயத்தில் எமது பங்களிப்பு ஈடு இணையற்றது. இலங்கையிலும் மற்றும் இந்தோ-பசிபிக் பிராந்தியம் முழுவதும் உட்கட்டமைப்பு மற்றும் மனித மூலதன அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காக அமெரிக்க அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், அமெரிக்க வர்த்தக அபிவிருத்தி முகவரமைப்பு, அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவரமைப்பு (USAID) மற்றும் பிற முகவரமைப்புகளுக்கும் குறிப்பிடத்தக்க வளங்களையும் நாம் வழங்கியுள்ளோம்.

இலங்கையின் சிறு வணிகங்கள் தமது நோக்கினை வளர்த்துக்கொள்வதற்குத் தேவையான மூலதனத்தைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்வதற்காக இவ்வருடமே அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், அல்லது DFC, 265 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கையின் தனியார் வங்கிகளுக்கு நிதியளிப்பதற்காக உறுதியளித்துள்ளது. அதி உயர் கவனயீர்ப்புடைய மற்றும் பொருளாதாரரீதியாக நம்பகமற்ற உட்கட்டமைப்புச் செயற்திட்டங்களை விட, இவ்வகையான நிதி உதவி பெரும்பாலும் நீண்டகால நிலைபேறான வளர்ச்சிக்கு அதிகம் பங்களிக்கிறது. முக்கியமாக, இவ்வணுகுமுறை இலங்கையர்களை “ஓட்டுநர் இருக்கையில்” அமர வைக்கிறது.

தொழிற்பயிற்சியினை வலுப்படுத்தவும், தொழிலாளர் படையின் திறனை மேம்படுத்தவும் மற்றும் இளைஞர்கள் மற்றும் பெண்களிடையே தொழில் முனைவோர் திறன்களை வளர்க்கவும் பணியாற்றுவதன் மூலம் USAID நிகழ்ச்சிகள் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கு உதவிபுரிகின்றன. இந்நிகழ்ச்சிகள் மூலம் இன்றுவரை 50,000 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தொழில் வழிகாட்டல் மற்றும் பணியமர்த்தல் சேவைகளால் பயனடைந்துள்ளனர்.

USAID சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை வலுப்படுத்துவதற்கான வளங்களை உறுதிப்படுத்துகிறது, விசேடமாக முறைசாரா துறைகளில் பெண்களுக்கு சொந்தமான வணிகங்கள். விசேடமாக முறைசாரா துறைகளில் பெண்களுக்கு சொந்தமான வணிகங்கள் உட்பட சிறு மற்றும் நடுத்தர வியாபாரங்களை வலுப்படுத்துவதற்கும் வளங்களை USAID ஈடுபடுத்தியுள்ளது. சமீபத்திய பொருளாதார அதிர்ச்சிகளால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இவ்வில்லங்கள், இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் முன்னோக்கிச் செல்வதற்கான ஆற்றல்களை வளர்ப்பதற்கு உண்மையிலேயே மிகவும் இன்றியமையாதவையாகும்.

2020 ஆம் ஆண்டில் பெண்களை உரிமையாளர்களாகக் கொண்ட 400 இற்கும் மேற்பட்ட வியாபாரங்களை நிறுவுவதற்கு USAID நிகழ்ச்சிகள் உதவி செய்துள்ளன. இந்த சூழலில் கூட, 400 வியாபாரங்கள் தொடங்கப்பட்டன. DFC கடன்கள் இலங்கை பெண்களுக்குச் சொந்தமான அல்லது அவர்கள் தலைமைதாங்கும் சிறு மற்றும் நடுத்தர வியாபாரங்களையும் இலக்காகக்

கொள்வதுடன், வணிகத்தில் ஈடுபட்டுள்ள பெண்களை வலுவூட்டுவதன் மூலம் இந்நிதியளிப்பானது நிதி ரீதியில் உள்ளடக்கப்படுதலை விரிவாக்கும், பாலின சமத்துவமின்மையைக் கட்டுப்படுத்தும் மற்றும் பெண்கள் தலைமையிலான வியாபாரங்களுக்கான உதவியினை அதிகரிக்கும்.

அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியினை அடைவதென்பது மிகச்சிறந்த நேரங்களிலேயே கடினமானது, நிச்சயமாக, இந்தத் தீராத பெருந்தொற்றின் சூழலில் அது மிகக்கடினமாக இருக்கும் என நான் நினைக்கிறேன். நான் முன்பு கூறியவை நல்ல செய்திகள் எனினும் தற்போதய சூழல் இன்னும் மிகவும் கடினம் என எமக்குத் தெரியும்.

18 மாதகால பெருந்தொற்றினால் தூண்டப்பட்ட இழப்புகளுக்குப் பிறகு இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் முந்திய வழமையான நிலைக்கு மீளச்செய்வதென்பது இக்கொள்கைச் சீர்திருத்தங்கள் மட்டுமல்ல, உண்மையில் வைரஸை வீழ்த்துவதாகும் என்பது உங்களுக்குத் தெரியும் என, எனக்குத் தெரியும். கடந்த வாரம் ஜூலை 16 ஆம் தேதி வெள்ளிக்கிழமை, எமது சொந்தத் தேசிய ஒதுக்கத்திலிருந்து 1.5 மில்லியன் மொடர்னா தடுப்பூசி மருந்துகளை அமெரிக்கா வழங்கியது. பொருளாதாரம் மிகப் பாதுகாப்பாக மீளத்திறப்பதற்கு உதவக்கூடிய சோதனைத் திறனைப் பேணுவதற்கு இங்குள்ள அரசு மற்றும் மக்களுக்கு உதவுவதற்காக 500,000 மிகவிரைவாக நோய்கண்டறியும் சோதனைகளையும் அதே நாளில் நாம் கையளித்தோம். ஒட்டுமொத்தமாக அமெரிக்கா இலங்கையின் கொவிட்-19 பதிலளிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு 8 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகையினை வழங்கியுள்ளது. இது, இலகுவில் காவிச்செல்லக்கூடிய செயற்கை சுவாசக் கருவிகள், விரல் நுனிகளில் பொருத்தும் ஒக்ஸிமீட்டர்கள் மற்றும் இலட்சக்கணக்கான மருத்துவத்தரம் வாய்ந்த முகக்கவசங்கள், கண்ணாடிகள் மற்றும் பிற தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் ஆகிவற்றை உள்ளடக்கியது.

கொவிட் -19 இனால் ஏற்படுத்தப்பட்ட அழிவு மற்றும் மரணத்திலிருந்து மீண்டெழுவதற்கு இலங்கைக்கும் உலகிற்கும் உதவ நாம் உறுதிபூண்டுள்ளோம். அதனால்தான் பெருந்தொற்றின் ஆரம்பத்தில் அமெரிக்கா உலக சுகாதார அமைப்பு மற்றும் பிற சர்வதேச பங்குதாரர்களுடன் இணைந்து, பாதுகாப்பான, பயனுள்ள மற்றும் உயர் தரமான கொவிட்-19 தடுப்பூசிகளுக்கு சமமான அணுகலை வழங்கும் உலகளாவிய முன்முயற்சியான COVAX இனை நிறுவுவதற்குப் பணியாற்றியது, COVAX ஏற்கனவே இலங்கைக்கு அனுப்பிய அண்ணளவாக இரண்டு மில்லியன் தடுப்பூசிகள் உட்பட 121 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகளை 136 வெவ்வேறு நாடுகளுக்கு அனுப்பியுள்ளது. இலங்கைக்கு அனுப்பப்பட்டவற்றுள் எமது தேசியக் களஞ்சியத்திலிருந்து பங்களிப்புச் செய்யப்பட்ட 1.5 மில்லியன் தடுப்பூசிகள் COVAX பொறிமுறை ஊடாக இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 760 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகளுக்கு தடுப்பூசியினை ஏற்றிய அரச/தனியார் பங்காண்மையான Gavi உடனும் நாம் பணியாற்றுகிறோம். வருடாந்தம் உலகெங்கிலும் வழக்கமான தடுப்பூசியேற்றல்கள் மற்றும் தொற்றுநோய்ப் பரவல்களுக்கான பதிலளிப்பு நடவடிக்கைகளுக்காக இரண்டு பில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசி மருந்துகளைப் பெறுகின்ற UNICEF உடனும் நாம் பணியாற்றுகிறோம், மற்றும் அவர்கள் தங்கள் இலக்கு நாடுகளில் கொவிட் தடுப்பூசிகளை விநியோகிக்கவும் முன்வந்துள்ளனர். சர்வதேச ஒத்துழைப்பு, தாராள மனப்பான்மை மற்றும் மருத்துவ கண்டுபிடிப்பு ஆகியவற்றின் கலவையானது உயிர்காக்கும் தடுப்பூசிகளை வாங்க முடியாத நாடுகள்கூட தமது குடிமக்களுக்கு தடுப்பூசிகளை ஏற்ற முடியும் என்பதை உறுதி செய்கிறது.

கொவிட்-19 இலிருந்து அனைவரும் பாதுகாப்பாக இருக்கும் வரை யாரும் கொவிட் -19 இலிருந்து பாதுகாப்பாக இல்லை என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.

இறுதியாக, வெளிப்படைத்தன்மையற்ற பொறுப்பற்ற அரச கடன்களைத் தவிர்ப்பதன் மூலம் அதன் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான கொள்கைகளை இயற்றுவதற்கும் மற்றும் நிதி நிறுவனங்கள் மற்றும் அரச நிதிகளை சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் முகாமைசெய்வதற்கும் இலங்கைக்கு உதவுவதன் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்துவது தொடர்பாக இலங்கையுடன் நாம் மேற்கொள்ளும் எமது பணி மிக முக்கியமானதாகும்.

இலங்கையின் பொருளாதாரம் தற்போது பாரதூரமான சவால்களை எதிர்கொண்டுள்ளதென்பது இரகசியமான விடயமல்ல. மற்றும் ஒதுக்கங்களை தக்கவைத்துக்கொள்வதற்கும் மற்றும் இலங்கை அதன் இறையாண்மை தொடர்பான கடமைகளை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதற்கும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பது புரிந்துகொள்ளக்கூடியதே எனினும் அவ்வாறான தேவைக்கேற்ற தற்காலிக நடவடிக்கைகள் பயனற்றுப்போகும் ஒரு கட்டத்தினை அடைதல் விரைவிலேயே இடம்பெறலாம். இதனால்தான் இலங்கை ஒரு உறுப்பு நாடு என்றவகையில் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) ஆக்கபூர்வமான முறையில் தொடர்புகொள்ள வேண்டும் என எனது அரசாங்கம் பரிந்துரைத்துள்ளது. இலங்கை எதிர்கொள்ளும் சவால்களுக்கு இலகுவான பதில்கள் இல்லை, ஆனால் எமது ஜனாதிபதி பைடன் கூறியது போல் சிறப்பாக மீளக் கட்டமைக்க ஒரு வாய்ப்பு உள்ளது.

முன்னோக்கிச் செல்வதற்கான சிறந்த பாதையைப் பற்றிய கலந்துரையாடல்களை எளிதாக்குவதற்கு அமெரிக்க திறைசேரித் திணைக்களம் ஊடாக தொழில்நுட்ப உதவிகளையும் மற்றும் நிபுணத்துவத்தையும் வழங்க நாம் உறுதிபூண்டுள்ளோம். கொள்முதல் முதல்

சுற்றுச்சூழல் கொள்கைகள், சிறந்த நிதி நடைமுறைகள் வரை மற்றும் அதற்கு அப்பாலும் உள்ள பல்வேறு தலைப்புகள் தொடர்பாக சர்வதேச நிபுணர்களுக்கு எம்மால் உதவ முடியும். இத்தலைப்புகள் பலவற்றில் கணிசமான நிபுணத்துவம் கொண்டவர்கள் இலங்கையில் வசிப்பது எனக்குத் தெரியுமெனினும், அவர்களது அறிவினை அரசிற்கு வழங்கும் பல முயற்சிகளை நாம் ஆதரிக்கிறோம்.

இவை மற்றும் ஏனைய முன்னுரிமைகள் தொடர்பிலும் மற்றும் வலுவான ஒரு இலங்கையை கட்டியெழுப்பவும் எமது நாடுகளுக்கிடையே வலுவான ஒரு உறவை உருவாக்கவும் நாம் எவ்வாறு ஒன்றிணைந்து செயல்பட முடியும் என்பது தொடர்பிலும் எமது கலந்துரையாடல்களைத் தொடர நாம் எதிர்பார்க்கிறோம்.

பாதுகாப்பான மற்றும் வளமான இலங்கைக்கு உதவுவதில் அமெரிக்கா உறுதியாக உள்ளது. இலங்கை அரசாங்கமும் மக்களும் எமக்கிடையில் பொதுவான ஜனநாயக மதிப்பீடுகளுக்கும் நெறிமுறைகளுக்கும் உறுதியுடன் இருக்கும் வரை நாம் எப்போதும் விருப்பமுள்ள பங்குதாரர்களாக இருப்போம். தேசிய நல்லிணக்கம் வெற்றிபெறுவதற்கு ஒரு நிறுவனக் கட்டமைப்பு அவசியமாவதுடன் ஒரு நல்லிணக்கமான இலங்கையினால்தான் வேற்றுமையினை அகற்றி பரந்த அடிப்படையிலான சமமான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும். அமெரிக்காவிற்கு மிகவும் அபிவிருத்தியடைந்த, மற்றும் மிகவும் பாதுகாப்பான பங்குதாரராகவும் மற்றும் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையின் ஆதாரப்புள்ளியாகவும் ஆவதற்கு இலங்கைக்கு இயலுமாவதுடன் அவை எல்லாவற்றையும் விட மிக முக்கியமாக, இந்த அழகிய தீவின் மக்களுக்கு செழிப்பு மற்றும் அமைதியை வழங்கும் ஒரு நாடாகவும் மாற முடியும்.

இலங்கை உண்மையிலேயே மகத்தான ஆற்றலைக் கொண்ட ஒரு அற்புதமான நாடு. நாம் ஒன்றாக இணைந்து பணியாற்றக்கூடிய பல நேர்மறையான விடயங்கள் மற்றும் ஆச்சரியமான வாய்ப்புகள் உள்ளன.

அமெரிக்க – இலங்கை வர்த்தக சபையிலிருந்து வரும் பங்காண்மை மற்றும் நட்பை நான் பாராட்டுவதுடன் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள எதிர்பார்க்கிறேன்.

நன்றி.

# # # #